**நல்ல லாபம் கொடுக்கும் நாட்டுக் கத்திரி ரகங்கள்!**




சுவையிலும், மணத்திலும் ஈடு இணையற்றவையாக இருக்கும் பாரம்பரிய ரக கத்திரியின் மவுசே தனிதான்! அந்த வரிசையில் பொன்னி, மணப்பாறைப் பச்சை, வெள்ளை ஆகிய பாரம்பரிய ரக கத்திரிகளை, இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறார். திருச்சி, மாவட்டம், திண்ணக்கோணம் கிராமத்தைச் சேர்ந்த யோகநாதன்.

வீரிய ரகத்தால் விளைந்த வினை!

கத்திரித் தோட்ட வேலைகளில் காலையிலேயே சுறுசுறுப்பாக இறங்கயிருந்த யோகநாதன், “இரண்டு ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, கத்திரி சாகுபடி பண்ணிக்கிட்டிருக்கிறேன். எங்கப் பகுதியில் பிரபலமான பொன்னி, மணப்பாறை வெள்ளை, மணப்பாறைப் பச்சை.. இந்த மூன்று ரகங்களும் நல்லா சுவையாக இருக்கும். குழம்பு வைத்தால்.. நெய் மாதிரி மணக்கும். அதனால், இந்த ரகங்களுக்கு தமிழ்நாடு முழுக்கவே நல்ல மவுசு இருக்கிறது.

ஆரம்பத்தில் இந்தப் பகுதியில் வெறும் தொழுவுரத்தை மட்டுமேதான் போட்டு சாகுபடி பண்ணிக்கிட்டு இருந்தாங்க. வீரிய ரகமெல்லாம் சந்தைக்கு வந்த பன் தான் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி என்று பயன்படுத்த ஆரமபிச்சாங்க. அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து இன்றைக்கு பத்து நாளைக்கொரு முறை பூச்சிக்கொல்லியை அடித்தே ஆகணும் என்கிற நிலைமை வந்துவிட்டது. என்னதான் ரசாயனத்தை அள்ளிக் கொட்டினாலும், சொத்தைக்காய் வராமத்

தடுக்க முடிவதில்லை. பழக்க தோஷத்தில் நாட்டுக் கத்திரி சாகுபடி பண்றவங்களும் ரசாயனத்தைப் பயன்படுத்த ஆரம்பிச்சதுதான் கொடுமை.

சொத்தைக் காய்கள் குறைகின்றன!

நாட்டு ரக கத்திரிக்கு ரசாயன விஷயங்களே தேவை இல்லை. இயற்கை முறையில் அருமையாக விளைகிறது. காய் நன்றாக திரட்சியாக இருக்கிறது. பறித்து நான்கு நாள் வைத்திருந்தால் கூட காய் வதங்குவதில்லை. கொஞ்சமாத்தான் சொத்தை விழுகிறது. இயற்கை முறையில் பண்ணும் போது ஏகப்பட்ட பணம் மிச்சமாகிறது. ஐந்து வருடமாக வெண்டை, தக்காளி, அவைர என்று இயற்கை முறையில்தான் சாகுபடி செய்தேன்.

நல்ல விளைச்சல் கிடைக்கிறது. அதனால்தான் இந்த முறை ஒரு ஏக்கரில் கத்திரி போட்டேன். நடவு செய்து ஐந்து மாதம் ஆகிறது. மூன்று மாதமாக காய் பறித்துக் கொண்டிருக்கிறேன். நான் எதிர்பார்த்ததைவிட நல்ல மகசூல் கிடைத்திட்டிருக்கு.

வடிகால் வசதியுள்ள நிலம்!

‘பொன்னி ரகம். நீல நிறத்திலும்: மணப்பாறை வெள்ளை ரகம். பெயருக்கு ஏற்றாற் போல் வெள்ளை நிறத்திலும், மணப்பாறை பச்சை ரகம்.. பச்சை நிறத்திலும் இருக்கும். மூன்றிற்குமே சாகுபடி முறைகள் ஒன்றுதான் என்பதால், இவற்றில் ஏதாவது ஒன்றையோ அல்லத மூன்று ரகங்களையும் கலந்து கூட ஒரே வயலில் நடவு செய்யலாம். வடிகால் வசதி உடைய அனைத்து வகையான மண்ணிலும் இந்த ரகங்கள் நன்றாக விளையும். மணற்பாங்கான பகுதியில் செடியின் வளர்ச்சியும் காய்ப்பும் அதிகமாக இருந்தாலும், சுவை கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும்.

விதைகளை நாமே உற்பத்தி செய்யலாம்!

ஒரு ஏக்கருக்க தேவையான நாற்றுகளை உற்பத்தி செய்ய, 200 கிராம் விதை தேவைப்படும். நன்கு முற்றிய 70 கத்திரிக்காய்களை செடியிலேயே பழுக்கவிட வேண்டும். பிறகு, அவற்றைப் பறித்து தண்ணீரில் இரண்டு நாட்கள் ஊற வைத்து, கையால் நன்கு கசக்கி விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். அவற்றை தண்ணீரில் நன்றாக அலசி எடுத்து, கொஞ்சம் சாம்பலோடு சேர்த்துப் பிசைந்து ஒரு நாள் முழுவதும் வெயிலில் காய வைத்து சேமிக்க வேண்டும். இரண்டு மாதங்கள் வைத்திருந்து பிறகு, பயன்படுத்தலாம்.

மூன்று சென்டில் நாற்றங்கால்!

ஒரு ஏக்கரில் விதைக்க, மூன்று சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். முதலில் 2 சால் உழவு ஓட்டி, மண்ணைப் புழுதியாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு, 50 கிலோ தொழுவுரத்தில் தலா 200 கிராம் டிரைக்கோ டெர்மா விரிடி, பாஸ்பேர – பாக்டீரியா, அசோஸ்பைரில்லம் ஆகியவற்றைக் கலந்து, நிலத்தில் இறைத்து, உழவு ஓட்ட வேண்டும்.

பிறகு, கத்திரி விதைகளை மணலோடு கலந்து தூவி விதைக்க வேண்டும். கூடவே, 50 கிலோ மண்புழு உரத்தை விதைகளை மூடுமளவுக்குத் தூவ வேண்டும். பூவாளி மூலம் நாற்றங்காலில் தண்ணீர் தெளித்து வர வேண்டும். 15 மற்றும் 30-ம் நாட்களில் 300 மில்லி பஞ்சகவ்யாவை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 40-ம் நாளுக்கு மேல் நாற்றுகளைப் பறித்து நடலாம்.

மூன்றடி இடைவெளி!

ஒரு ஏக்கர் நிலத்தில் இரண்டு சால் உழவு செய்து, 5 டன் தொழுவுரத்தைக் கொட்டி கலைத்து, மீண்டும் ஒரு உழவு ஓட்டி 5 அடி அகலம், 10 அடி நீளத்தில் செவ்வகப் பாத்திகள் அமைக்க வேண்டும். பாத்திகளில் வரிசைக்கு வரிகை 3 அடி, செடிக்கு செடி 3 அடி இடைவெளி விட்டு இரட்டை நாற்றுகளாக நடவு செய்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 4-ம் நாள் ஒரு முறையும், தொடர்ந்து வாரம் ஒரு முறையும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். செடிகள் நன்கு வளர்நத பிறகு, 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

பூச்சிகளுக்குக் கவர்ச்சிப் பொறிகள்!

7-ம் நாளுக்கு மேல் செடிகள் துளிர்த்து வளரும். 15 –ம் நாள் முதல் களை எடுத்து 3 லிட்டர் பஞ்சகவ்யாவை 150 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 30-ம் நாள் இரண்டாம் களை எடுத்து, 6 லிட்டர் பஞ்சகவ்யாவை 300 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

அன்றைக்கே 250 கிலோ மண்புழு உரம், 50 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, தலா 2 கிலோ டிரைக்கோ டெர்மா விரிடி, பாஸ்போ – பாக்டீரியா, அசோஸ்பைரில்லம் ஆகியவற்றை ஒன்றாக் கலந்து நிலத்தில் தூவி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 30 நாளுக்குப் பிறகு, காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்தும் பச்சை வண்ணப் பொறியை 12 இடங்களில் அமைக்க வேண்டும். அறுவடை முடியும் வரை இந்தப் பொறிகள் வயலில் இருக்க வேண்டும். 40-ம் நாள் 500 மில்லி புங்கன்

எண்ணெய், 500 மில்லி வேப்பெண்ணெய், 250 மில்லி இலுப்பை எண்ணெய் 100 கிராம் காதி சோப் ஆகியவற்றை 150 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 45-ம் நாள் மூன்றாவதாக களை எடுத்து, ஆறு இடங்களில் விளக்குப் பொறிகளை அமைக்க வேண்டும். இவை மற்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்தி விடும். அறுவடை முடியும் வரை விளக்குப் பொறிகள் வயலில் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

நான்கு பகுதிகளாக பிரித்து அறுவடை!

55 –ம் நாளுக்கு மேல் காய்கள் பறிப்புக்கு வந்து விடும். தொடர்ந்து ஆறு மாதங்கள் வரை பறிக்கலாம். மொத்த மகசூல் முடிந்த பிறகு, செடிகளை வேரோடு பறித்து நிலத்தில் போட்டு உழுது, மீண்டும் சாகுபடியைத் தொடங்கலாம்.

1 லட்சம் ரூபாய் லாபம்!

கத்தரிக்காய் நன்றாக காய்க்கத் தொடங்கினால் நான்கு நாளைக்கு ஒருமுறை காய் பறிக்கலாம். முதல் மாதம் ஒவ்வொரு பறிப்புக்கும் சராசரியாக 60 கிலோவும், இரண்டாவது மாதத்தில் ஒவ்வொரு பறிப்புக்கும் 120 கிலோவும் மகசூலாக கிடைத்தது. மூன்றாவது மாதத்திலிருந்து ஒரு பறிப்புக்கு சராசரியாக 500 கிலோவிற்கு குறையாமல் கிடைத்தது. ஆகக்கூடி மூன்று மாதம் காய் பறித்ததில் சுமார் 4,500 கிலோ வரைக்கும் காய் கிடைத்திருக்கு. கத்தரிக்காயைப் பொறுத்த அளவில் தொடக்கத்தில் மகசூல் கம்மியாக இருக்கும். போகப் போக அதிகரிக்கும்.

இன்னும் மூன்று மாதம் வரைக்கும் தொடர்ந்து காய் பறிக்கலாம். அந்த வகையில், பறிப்புக்கு 500 கிலோ வீதம் மொத்தம் 90 நாளைக்கு 22 பறிப்பு. இதன் மூலமாக 11 டன் மகசூல் கிடைக்கும். கிலோவுக்கு சராசரியாக 9 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. மொத்த மகசூல் 15.5 டன் கிடைக்கும். 1 லட்சத்தில் 39 ஆயிரம் ரூபாய் வருமானமாக கிடைக்கும். எல்லாச் செலவும் போக, ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் லாபம் கிடைக்கும் .

ஒரு ஏக்கரில் இயற்கை முறையில் நாட்டுக் கத்திரி ரகங்களை சாகுபடி செய்ய யோகநாதன் சொல்லும் செலவு – வரவுக் கணக்கு

**ஒரு ஏக்கரில் இயற்கை முறையில் நாட்டுக் கத்திரி ரகங்களை சாகுபடி செய்ய யோகநாதன் சொல்லும் செலவு – வரவுக் கணக்கு**

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| நாற்று உற்பத்தி | 1,000 | |
| உழவு | 1,400 | |
| தொழுவுரம் | 2,500 | |
| பாத்தி | 250 | |
| நடவு | 750 | |
| களை | 4,500 | |
| இடுபொருட்கள் | 2,800 | |
| கவர்ச்சிப் பொறிகள் | 750 | |
| பறிப்புக் கூலி | 4,500 | |
| போக்குவரத்து, கமிஷன் | 5,400 | |
| 4,500 கிலோ காய் விற்பனை மூலம் வரவு | | 40,500 |
| மொத்தம் | 23,850 | 40,500 |
| நிகர லாபம் | | 16,650 |
| குறிப்பு : 16,650 ரூபாய் என்பது மூன்று மாதங்களில் கிடைத்த லாபம். மிச்சமிருக்கும் மூன்று மாதங்களில் இன்னும் 11,000 கிலோ மகசூல் எதிர்பார்க்கிறார் யோகநாதன். "இதன் மூலமாக 99,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இடுபொருட்கள், போக்குவரத்து, கமிஷன் செலவுகள் 15,000 ரூபாய் போக, மீதி 84,000 ரூபாய் லாபமாக கிடைக்கும். ஏற்கனவே கிடைத்த 16,650 ரூபாயையும் சேர்த்தால்.. கிட்டதட்ட 1 லட்ச ரூபாய் கிடைக்கும். | | |

குறிப்பு : 16,650 ரூபாய் என்பது மூன்று மாதங்களில் கிடைத்த லாபம். மிச்சமிருக்கும் மூன்று மாதங்களில் இன்னும் 11,000 கிலோ மகசூல் எதிர்பார்க்கிறார் யோகநாதன். "இதன் மூலமாக 99,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இடுபொருட்கள், போக்குவரத்து, கமிஷன் செலவுகள் 15,000 ரூபாய் போக, மீதி 84,000 ரூபாய் லாபமாக கிடைக்கும். ஏற்கனவே கிடைத்த 16,650 ரூபாயையும் சேர்த்தால்.. கிட்டதட்ட 1 லட்ச ரூபாய் கிடைக்கும்.

தொடர்புக்கு :

யோகநாதன், அலைபேசி : 94428 – 16863

ஆதாரம் : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.7.11